بسم الله الرحمن الرحيم

# FRIDAY SERMON

**வெள்ளிக்கிழமை குத்து:பா** 24-09-2010

# MARRIAGE IS HOLY

# திருமணம் என்பது புனிதமானது

## Hazrat Khalifathullah Munir Ahmad Azim (A)

உலகின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள தனது தோழர்களுக்கு சமாதான வாழ்த்துக்களை அறிவித்த பிறகு தஷஹ்ஹுதும், தஅவ்வுசும் அல்பாத்திஹாவும் ஓதி ஹஸ்ரத் கலீஃபத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அ) அவர்கள் கீழ்வருமாறு கூறினார்.

திருமணம் என்பது இறைவணக்கத்திற்கு சமமான ஒரு செயலாகும். உயிரினை பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்பதும் விதிநாள் வரையிலும் அதை நிலைநாட்டிக்கொள்ள வேண்டும் என்பதும் இஸ்லாமின் போதனைகளில் உட்படுகின்ற விஷயமாகும. அதனாலாகும் இஸ்லாம் திருமணத்தை ஊக்குவிப்பதும் குழந்தைகளும் பேரகுழந்தைகளுமாக வம்சாவளியை நிலைநாட்டிக்கொள்ள வேண்டுகோள் விடுத்திருப்பதும்.

**“அல்லாஹ் உங்களுக்காக உங்களில் இருந்தே இணைகளையாக்கியுள்ளான். மேலும் உங்களுக்காக உங்கள் இணைகளில் இருந்து ஆண்பிள்ளைகளையும், பேரபிள்ளைகளையும் ஆக்கினான். மேலும் அவன் தூய்மையான எல்லா வகைப் பொருட்களில் இருந்தும் உங்களுக்கு உணவளித்துள்ளான்”.** (16-73).

ஏகனாக வாழ்வதை அதாவது ஆசிரம வாழ்க்கையை இஸ்லாம் நிராகரிக்கின்றது என்ற உண்மை மேல் கூறிய குர்ஆன் வசனங்கள் உறுதிப்படுத்துகின்றது. ஒரு முனிவரையோ அல்லாது கன்னி பெண்ணையோ பொறுத்தவரையில் அவர்களின் ஜீவபாரம்பரியம் அந்த வாழ்க்கையோடு முடிவடைகின்றது. ஏகனாக வாழ்ந்து இறைவணக்கம் செய்வது மனிதன் சுயமாகவே கண்டுபிடித்தாகும். இவ்வழியை அனைவரும் பின்பற்றிக்கொண்டால் இந்த உலகிற்கே அழிவு நேர்ந்திடும். அதனால் இஸ்லாம் திருமணத்தை இறை வணக்கத்திற்கு சமமான செயல் என்று சிறப்பித்ததில் அற்புதம் வாய்ந்த எதுவுமில்லை. சட்டத்திற்கு ஏற்ற களத்தில் நின்றுக்கொண்டு விருப்பத்தை எட்டி விடுங்கள் என்ற கட்டளையை கடைப்பிடிப்பது இறை வணக்கமேயாகும். அதற்கு அந்த நபருக்கு பிரதிபலன் கிடைத்துவிடவும் செய்யும். திருநபி(ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்.

**“பரிசுத்தனும் தீமையற்றவனுமாக எவர் அல்லாஹவின் திரு சன்னிதியில் செல்ல விரும்புகின்றீர்களோ அவன் நேர்மையும் நல்லொழுக்கவும் வாய்ந்த பெண்களை மணம் முடித்துக்கொள்ளட்டும்”.**

மட்டுமின்றி,

1. நன்றி பூரணமான உள்ளம்

2. இறைவனை புகழும் நிறைவு பெற்ற நாவு

3. கடினமான சோதனைகளை எதிர்கொள்கின்ற உடம்பு

4. கணவரின் சொத்து சுகங்களில் நின்றியுடையவளாகவும் திருப்தியடைந்தவளாகவும் கணவனுக்கு எவ்வித தீங்கு இழைக்காத நல்லவளாகிய மனைவி

மேல்கூறிய நான்கு விஷயங்களும் கைவசப்படுத்துகின்றவன் எவனோ அவனுக்கு இம்மையிலும், மறுமையிலும் நன்மை வரும் என்று ஹதீஸில் கூறப்பட்டிருக்கின்றது. தளர்வோ, தோல்வி எண்ணமே இல்லாமல் கடமைகள் நிறைவேற்றுவதும் தன்னிடம் அர்ப்பிக்கப்பட்ட வேலைகளை கண்ணியத்துடன் காண்பதும், சக்தி வாய்ந்ததும் உறுதியாக நிலைநிற்பவனுமாகிய நபரையாகும் **“கடினமான சோதனைகளை எதிர் கொள்கின்ற உடம்பு”** என்று பொருளாக்கப்பட்டிருப்பது.

ஒரு முஸ்லீம் எவ்வாறான பெண்ணை மணமுடிக்க வேண்டும் என்பது தெளிவான பதில் கிடைக்க வேண்டிய ஒரு கேள்வியேயாகும். விலங்குகளை போன்று எல்கையில்லாமல் பெற்று பெருகிவிடுவதற்காக நடத்தக்கூடிய ஒன்றல்ல திருமணம் என்ற உண்மையை நாம் உணரவேண்டும். இஸ்லாமிக குடும்பம் என்றால் நல்லொழுக்கவும், உயிர் ஊற்றும் ஒன்றுபோல் திகழவும், நிலை நிற்கவும் வேண்டும். அங்கு நம்பிக்கையும் செழிப்பும் பெருகிட வேண்டும். உண்டும் குடித்தும் அடித்தும் மகிழ்ச்சியடைய மட்டும் தெரியும் தலைமுறைகளை உருவாக்குவதல்ல திருமணத்தின் நோக்கம். மாறாக வாழ்க்கையின் உண்மையான நோக்கத்தை பகுத்தறியக்கூடிய திறமை வாய்ந்த தலைமுறைகளை உருவாக்கிட வேண்டும் என்பதே ஆகும்.

பிள்ளைகளுக்கு கல்வி வழங்கி, அவர்களை சமாதானத்தினுடையவும் எளிமையுடையவும் உள்ளம் வாய்ந்தவர்களாக வளரச்செய்து, எண்ணங்களிலும் வாழ்க்கையின் லட்சியத்திலும் தாழ்மையுள்ளவர்களாக மாற்றிட பெற்றோர்கள் இணைந்து முயற்சிக்கவும் ஒன்றுக்கொன்று உதவிபுரியவும் வேண்டும்.

அல்லாஹ் சந்தானபாக்கியம் வழங்கி அருள்புரிந்த போது இப்பிராஹீம் நபி(அ) அவர்கள் செய்த பிரார்த்தனை இத்தருணத்தில் சிந்திக்க தகுந்ததேயாகும்.

**“எனது முதுமையிலும் எனக்கு அவன் இஸ்லாமையும் இஸ்ஹாக்கையும் வழங்கியுள்ளான். நிச்சயமாக இறைவன் வேண்டுதலை நன்கு கேட்கிறவன் ஆவான். என் இறைவா என்னையும் என் சந்ததிகளையும் தொழுகையில் மிக சிறந்த முறையில் நிறைவேற்றுபவர்களாக்கி வைப்பாயாக. எங்கள் இறைவா என் பிரார்த்தனைகளை ஏற்றுக்கொள்வாயாக”** (14:40,41).

அல்லாஹ்வின் திருசன்னிதியில் குனிந்து வணங்குகின்ற சந்ததிகளையாகும் அவர் தேவைப்படுகின்றது.

பிள்ளைகளை தீயவர்களாகவும் நாத்திகராகவும் வளரச்செய்வது எவ்வளவு மோசமான செயலாகும். தங்கள் பெற்றெடுத்த குழந்தைகளை முற்றிலும் கவனிக்காமல் இருக்கும் ஆள்கள் இக்காலத்தில் ஏராளமாகும். தனது பிள்ளைகள் இறை நம்பிக்கையுடையவர்களாகத்தானே வளர்க்கின்றார்கள் என்பது அவர்களுக்கு ஒரு விஷயமல்ல. மாறாக லௌகீக சுகத்திற்கும் பௌதீக எண்ணங்களுக்குமாக பிள்ளைகளை வளர்த்திட வேண்டும் என்பதே அவர்களின் நோக்கத்தில் முக்கியத்தும் வாய்ந்ததாக இருக்கும் விஷயம். அதன் பலனாக அவர்களும் அதைபோன்று வளர்க்கின்ற அவர்களின் சந்தானபரம்பரையும் இறுதியில் நெருப்புக்கும் இரையாகி விடுகின்றார்கள்.

இணையை தேர்ந்தெடுத்து ஒரு குடும்ப வாழ்கை ஆரம்பிக்கின்ற போது தனது நல்லடியார்களுக்காக நிகரற்ற அன்புடையோனாகிய அல்லாஹ் இந்த பிரார்த்தனை கற்பித்து தந்திருக்கின்றான்.

**“எங்கள் இறைவா எங்கள் மனைவியையும் எங்கள் குழந்தைகளையும் எங்கள் கண்களுக்கு குளிர்ச்சியை அளிக்கின்றவர்களாக மாற்றுவாயாக”** (25-75).

ஒரு முகத்தை தவிர்த்துக்கொண்டு புதிய முகங்களை தேடிக்கொள்கின்ற கண்கள் நயவஞ்சகர்களுடையதாகும். அது அவனை இழப்பின்பால் எட்டவைத்துக்கொள்கின்றது.

கணவன் மனைவி ஒன்றுக்கொன்று சந்தோஷவும் மனசாந்தியும் வழங்கிக்கொள்கின்றோர்களாக இருக்க வேண்டும். அவ்வகையான ஒரு வாழ்க்கை முறை திகழ்ந்திட வேண்டும். அந்த ஒளிக்கும் திருப்திக்குமாக வாழ்க்கையை அர்ப்பித்துக்கொள்ள வேண்டும். பிள்ளைகளுக்கு கல்விகொடுப்பதிலும் அவர்களின் நிகழ்காலவும் எதிர்காலவும் பத்திரமாக்கிகொள்வதிலும் கவனமாக இருந்து அவர்களுக்கு துணைபுரிந்திட வேண்டும்.

நற்செயல்கள் செய்துக்கொள்வதற்கான வழிகள் ஏராளமாகும். அதில் போட்டிபோட்டு முன்னேற்றம் அடைய வேண்டும். நன்மையின்பால் நடந்துகொள்வதற்கும் அதில் முன்னேற்றத்தை அடைவதற்கும் உயர்ந்த எதிர்பார்ப்புகள் வைத்துக் கொள்வதற்கும் ஒரு முஸ்லீம் எப்போதும் தயாராக இருக்க வேண்டும். அதில் அவன் திடமனமுடையவனாக திகழ வேண்டும். மற்றவர்களுக்கு நல்வழிகாட்டிடவும் வேண்டும். சோம்பேறியாகவோ தாழ்ந்த நிலையிலான பதவியின்பால் தரம் தாழ்ந்திடவோ கூடாது. உடன்படிக்கையை அத்துமீறிக்கொள்ளாமல் இருக்க வேண்டும் என்பது நம்பிக்கையின் பகுதியாகும். **“பிர்தவ்ஸ்”** தேடிச் செல்பவனை அல்லாஹ் நேசிக்கின்றான். ஒரு உண்மையான முஸ்லீம் குடும்பத்தை கட்டி உயர்த்திட ஓய்வற்ற முயற்சிகளும் பிரார்த்தனைகளும் தேவையாகும்.

இன்ஷா அல்லாஹ் வருகின்ற வெள்ளி கிழமையும் இந்த குத்துஃபாவை தொடர்ந்து ஆற்றிக்கொள்வேன். ஆமீன்.

Translated by
**Azim Ahmad**
Sadr Sahibul Faraj
Kerala/ Tamil Nadu
E-mail: sahihazisulsat@gmail.com
Cell: 09789180817

**Issued by**
**Jamaat Ul-Sahih Al Islam,**
**Dawa Department,**
**Tamil Nadu, India. (Regd.No. A/693)**
**Web:www.jamaat-ul-sahih-al-islam.com**